### மர்மமான முறையில் இறந்த

# வாலிபர் உடல் மீண்டும் பிரேத பரிசோதனை

## ஐகோர்ட் உத்தரவுப்படி நடவடிக்கை

**கும்பகோணம்,ஏப்.21:** கும்பகோணத்தில் மர்மமான முறையில் குளத்தில் இறந்து மிதந்த வாலிபரின் உடல் மதுரை நீதிமன்றத்தின் உத்தரவுப்படி மீண்டும் பிரேத பரிசோதனை செய்யப்பட்டது.

தஞ்சை மாவட்டம் கும்பகோணத்தை அடுத்த தாராசுரம் எம்ஜிஆர் காலனியை சேர்ந்தவர் சிலம்பரசன் (30). இவர், சென்னையில் மெக்கானிக்காக வேலை செய்து வந்தார். இவருக்கு திருமணமாகி இரண்டு குழந்தைகள் உள்ளனர். இவர் மீது சீர்காழி, மன்னார்குடி, கும்பகோணம் உள்ளிட்ட பல காவல் நிலையங்களில் கொலை, கொள்ளை வழக்குகள் நிலுவையில் உள்ளதாக கூறப்படுகிறது. இந்நிலையில் கடந்த 8ம் தேதி சிலம்பரசன் தனது பெற்றோரை பார்க்க சென்னையிலிருந்து தாராசுரத்துக்கு வந்துள்ளார்.



கும்பகோணத்தில் குளத்தில் மூழ்கி மர்மமான முறையில் இறந்த வாலிபரின் உடல்அடக்கம் செய்யப்பட்ட தாராசுரத்தில் உடலை மீண்டும் தோண்டி எடுத்து பிரேத பரிசோதனை செய்யப்பட்டது.

தகவல் அறிந்த போலீசார் சிலம்பரசனை பிடிக்க முயன்ற போது தாராசுரம் எம்ஜிஆர் காலனியில் உள்ள குளத்துக்குள் குதித்து மூழ்கி மறைந்திருந்ததாக கூறப்படுகிறது. இதற்கிடையில் 9ம் தேதி காலை சிலம்பரசன் ரத்த காயங்களுடன் தண்ணீருக்குள் இறந்து கிடந்துள்ளார். தாலுகா போலீசார் சிலம்பரசன் உடலை மீட்டு கும்பகோணம் அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. பின்னர் சிலம்பரசனின் உடல் அடக்கம் செய்யப்பட்டது.

இந்நிலையில் சிலம்பரசனின் தாயார் வள்ளி, மதுரை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்திருந்தார். அதில் அவர் கூறியிருந்ததாவது: தனது மகன் சாவில் மர்மம் உள்ளது. அவசர அவசரமாக உடற்கூறு சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதால் எனது மகனின் சடலத்தை தோண்டி மீண்டும் பிரேத பரிசோதனை மேற்கொள்ள வேண்டும். பிரேத பரிசோதனையை வீடியோ பதிவு செய்திட வேண்டும் என அதில் குறிப்பிட்டிருந்தார். சிலம்பரசனின் சடலத்தை தஞ்சை மருத்துவக்கல்லூரி தடயவியல் ஆய்வாளர்கள் முன்னிலையில் மீண்டும் பிரேத பரிசோதனை மேற்கொள்ள வேண்டும் என மதுரை நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதையடுத்து மதுரை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் நாகேந்திரன், சைமன், சிபிசிஐடி டிஎஸ்பி பால்பாண்டி, சிலம்பரசனின் தாய் வள்ளி, தந்தை கலியமூர்த்தி ஆகியோர் முன்னிலையில் தஞ்சை மருத்துவக்கல்லூரி மருத்துவமனை டாக்டர்கள் சரவணன், உதயபானு, தடய அறிவியல் ஆய்வக உதவியாளர் ராமச்சந்திரன் ஆகியோர் நேற்று சிலம்பரசனின் உடலை தோண்டி எடுத்து மீண்டும் பிரேத பரிசோதனை மேற்கொண்டனர்.

தினகரன்
Wed, 21 April 2021
https://epaper.dinakaran.com/c/59934923